DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.250/2023

**prosecution witness: LW4 as PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காளிமுத்து | தொழில் | : | வேலை இல்லை |
| த/பெ. | : | பிச்சைமுத்து | வயது | : | 74 |
| கிராமம் | : | குஞ்சார் வலசை, வேதாளை | சமயம் | : | இந்து |
| தாலுகா | : | இராமநாதபுரம் | | | |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>22.07.2025</u>

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்,)

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது ஆகும். அது **அ.சா.ஆ.2** ஆகும். அதிலுள்ள விபரங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. குஞ்சார்வலசையில் நான் இருந்தபோது காவல்துறையினர் வந்து எழுதப்படாத வெள்ளைப் பேப்பரில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

கடந்த 20.04.2019 ம் தேதி காலை 10.30 மணிக்கு நானும், சக்தி என்பவரும் குஞ்சார்வலசையில் மீனா என்பவர் வீட்டின் முன்பு நின்று பேசிக்கொண்டிருந்த போது அங்கு வந்த மண்டபம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மீனா தாக்கப்பட்டது தொடர்பாக அந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் தயார் செய்த பார்வை மகஜரில் நானும், சக்தி என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. மண்டபம் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.07.24 17:13:32 +0530